2017 ஜூலை 10]

இப்போது சென்னை பெருநகர மாநகராட்சியாக வளர்ந்துவிட்டது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல, மின் கட்டணம் செலுத்த பொதுமக்களுக்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. தபால் அலுவலகம், வங்கிகள் மூலமாக மின் கட்டணம் கட்டலாம். மேலும், கணினி மூலமாக மின் கட்டணம் கட்டுகின்ற வசதியும் இருக்கின்றது. இன்னும் கூடிய விரைவில், Mobile Apps வசதியும் வர இருக்கின்றது. அப்போது அவரவர் வீடுகளில் இருந்து மின் கட்டணத்தைக் கட்டிக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 164, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

164—

அங்கன்வாடி மையம்

***16384—திரு. எ. ராமர்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், போத்துராவுத்தன்பட்டி ஊராட்சி, வடுகப்பட்டியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு குளித்தலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், போத்துராவுத்தன்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த வடுகப்பட்டியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற வினாவை எழுப்பியுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், குளித்தலை சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், போத்துராவுத்தன்பட்டி ஊராட்சி, வடுகப்பட்டியில் அங்கன்வாடி

மையம் 2006 ஆம் ஆண்டு முதல் தனியார் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே, இப்பகுதியில் அங்கன்வாடி மையம் செயல்படுவதால், புதியதாக அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மேலும், இம்மையத்திற்கென சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 2016–2017 ஆம் நிதியாண்டில் குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.6,50,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது கட்டடப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.

திரு. எ. ராமர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதியில் என்னை முதன் முதலாக சட்டமன்ற உறுப்பினராக்கிய மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் செயல் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான எங்கள் தளபதி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், போத்துராவுத்தன்பட்டி, ஊராட்சி, வடுகப்பட்டியில் அங்கன்வாடி மையம் அமைக்க எனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி கொடுக்கப்பட்டு, வடுகப்பட்டி அங்கன்வாடி மைய கட்டட வேலை 75 சதவீதம் முடிவடைந்துள்ளது. மேலும், எனது குளித்தலை தொகுதிக்குட்பட்ட கருங்கல்பட்டி, மத்தகிரி, வீரித்திகவுண்டனூர், சங்கம்பூசாரியூர், அய்யக்கண்டம்பட்டி, இராக்கபட்டி, கலிங்கப்பட்டி, செம்மேட்டுப்பட்டி, குமாரமங்கலம், கல்லுப்பட்டி, தண்ணீர்பள்ளி, திம்மாச்சிபுரம், எருமநாயக்கன்பட்டி, அயர்மலை மேற்கு, கோவிந்தனூர், பன்னீர்பட்டி, பஞ்சப்பட்டி தெற்கு, சுக்காம்பட்டி, தந்திரிப்பட்டி, கொசூர் கஸ்பா, கொசூர் மேட்டூர், நாகிப்பட்டி, குப்பாண்டியூர் வடக்கிளம், அக்காண்டிமேடு, மூட்டக்காம்பட்டி. . .

2017 ஜூலை 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர், மீதி இருக்கின்ற ஊர்களை அடுத்த வாய்ப்பு வரும்போது பேசலாம்.

திரு. எ. ராமர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊர்களின் பெயர்களை முதன்முதலில் இப்போதுதான் படிக்கின்றேன். மங்கம்பட்டி, கொட்டியம்பட்டி, மேலமேட்டுப்பட்டி, சங்காயப்பட்டி, தோகைமலை நெசவாளர் காலனி, பிள்ளைகோடங்கிப்பட்டி, கம்பத்தம்பாறை, ஆதிநத்தம் ஆகிய 33 ஊர்களிலும் அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடத்தில் பாதுகாப்பற்ற முறையிலும் போதிய வசதியில்லாத சூழ்நிலையிலும் இயங்கி வருகின்றன. இந்த மையங்களுக்கு எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாத காரணத்தினால், இந்த அங்கன்வாடி மையங்களுக்கு புதிய சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் மொத்தமுள்ள அங்கன்வாடி மையங்கள் 172. அரசுக் கட்டடத்தில் இயங்கும் மையங்கள் 90. வாடகைக் கட்டடங்களில் இயங்கும் மையங்கள் 66. வாடகை இல்லாது இலவசக் கட்டடத்தில் இயங்கும் மையங்கள் 16. வடுகப்பட்டி பகுதியில் ஒரேயொரு அங்கன்வாடி மையம் செயல்படுகின்றது. ஆக, குளித்தலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 172 அங்கன்வாடி மையங்களில், 6 மாதம் முதல் 60 மாதம் வரை உள்ள 955 குழந்தைகள் பயன்பெற்று வருகின்றார்கள். வடுகப்பட்டி மையத்தில் 48 குழந்தைகள் பயன்பெற்று வருகின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டச் சத்து குறைபாடு இல்லாத மாநிலமாக இந்த மாநிலத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, முன்பருவக் கல்வி நிறைவு பெற்று இதுவரை எந்த மாநிலமும் செயல்படுத்திடாத

அளவுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தினுடைய அனைத்துச் செயல்பாடுகளையும் ஆய்வு செய்து வருகிறார். ஒரு குழந்தையை நாட்டுக்குகந்த நல்ல குழந்தையாக ஆக்க, முன்பருவக் கல்வி முதல் ஊட்டச்சத்து நிறைந்த குழந்தையாக கற்றல், கற்பித்தல், சுயஒழுக்கம், சுயசுத்தம் என்ற அனைத்து அங்கங்களையும் கொண்டு இன்று மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய வழியில் மாண்புமிகு முதலமைச்சர் அய்யா அவர்களுடைய அரசு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் செயல்படும் இந்த அரசு இந்த நிதியாண்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்கு 1,917 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருப்பதையும், ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆயிரம் அங்கன்வாடி மையங்களைக் கட்டுவதற்கு 83 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருப்பதையும் இங்குள்ள மாமன்ற உறுப்பினர்கள் அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வர கடமைப்பட்டிருக்கின்றேன்.

> "நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
> இந்த நாடே இருக்குது தம்பி,
> சின்னஞ்சிறு கைகளை நம்பி
> ஒரு சரித்திரம் இருக்குது தம்பி"

என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், சத்துணவு தந்த சரித்திர நாயகன், நூற்றாண்டு நாயகன் அன்று பாடிய பாடலை இன்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ஒரு குழந்தையினுடைய வளர்ச்சிக்கு செய்கின்ற முதலீடு, இந்த நாட்டினுடைய வளர்ச்சிக்கு செய்கின்ற முதலீடு என்பதை உணர்த்தியுள்ளது.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற அனைத்து அங்கன்வாடி மையங்களையும் ஆய்வு செய்து, புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்கும், பழுதடைந்த கட்டடங்களில் பழுதுகளை நீக்கியும், அந்தக் குழந்தைகளுக்கு அனைத்து உதவிகளையும், வசதிகளையும்

செய்து கொடுத்து, அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளையும் செய்து கொடுத்து, அவற்றைப் பூர்த்தி செய்கின்ற ஒரு துறையாக செயல்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்படி, குளித்தலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து அங்கன்வாடி மையங்களையும் ஆய்வு செய்து, புதிதாகக் கட்டப்பட வேண்டிய கட்டடங்களைக் கட்டுவதோடு, பழுது பார்க்க வேண்டிய கட்டடங்களில் பழுது பார்க்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.*

திரு. எ. ராமர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கூறிய அங்கன்வாடி மையங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதோடு, காலிப் பணியிடங்களையும் நிரப்ப இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டுமென்று நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களுடைய துணையோடு, சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் துறை அலுவலர்கள் ஆய்வு செய்து, ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்பதற்காக, துறையால் ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையங்களில் 6 மாதம் முதல் 60 மாதங்கள் வரை உள்ள குழந்தைகள் பயன்பெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க உரையில் கூறினார். இந்த ஆண்டில், 1,000 அங்கன்வாடி மையக் கட்டடங்கள் 80 கோடி ரூபாயில் கட்டப்படுவதாகவும் அவர்களது பதிலுரையில் தெரிவித்தார். நான் கேட்க விரும்புவது, அங்கன்வாடி மையங்கள் ஒரே பகுதியில் 2 அல்லது 3 மையங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு எண்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவற்றில் போதிய அளவிற்கு குழந்தைகளின் எண்ணிக்கை இல்லை. 5 அல்லது 10 குழந்தைகள்தான் இருக்கின்றனர். தேவைப்படுகின்ற இடங்களில், கட்டடங்கள் இல்லாததால் அந்த அங்கன்வாடி மையங்கள் செயல்பட முடிவதில்லை. செயல்பட வேண்டிய 2, 3 அங்கன்வாடி மையங்களை சட்டமன்ற உறுப்பினர்கள் குறித்துக் கொடுக்கிறோம். அதற்குண்டான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ஒதுக்கீடு செய்கிறோம். தேவைப்படும் இடங்களில், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் மற்றும் குடிசைப் பகுதிகள் இருக்கின்ற பகுதிகளில் அங்கன்வாடி மையங்களை ஏற்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிற அதே நேரத்தில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, போதும். ஒரு கேள்வியுடன் நிறுத்திக்கொள்ளுங்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல பெயரை வாங்க வேண்டும் பிள்ளைகளே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சேகர்பாபு, உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைரீதியாக ஒவ்வொரு அங்கன்வாடி மையத்தையும் ஆய்வுசெய்து, துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*